©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 205] CHENNAI, TUESDAY, JULY 6, 2010
Aani 22, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### COLLECTORS AND LOCAL AUTHORITIES

**ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், கடலூர்.**

**கடலூர் மாவட்டம், மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம், கிளாவடிநத்தம் ஊராட்சி மன்றத் தலைவர், பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க.எண் அ8/1927/2008)*

**No. VI(2)/267(f)/2010.**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 205–ன் உட்பிரிவு 11–ல் ஊராட்சிகளின் ஆய்வாளர்/மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில், பரங்கிப்பேட்டை நீதி மன்றக் காவலில் இருந்தவர்கள், தீ விபத்தில் காயமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இறந்தவர் மற்றும் குற்றவியல் வழக்கில் கைது செய்யப்பட்டவர்களை ஜாமினில் எடுக்கச் சென்றவர்கள் ஆகியோரின் பெயர்களை வருகை பட்டியலில் போலியாக சேர்த்து போலியான ஆவணங்களை தயாரித்து வேலை செய்தது போன்று தினசரி வருகை பட்டியலில் வேலை ஆட்களின் கையெழுத்தை போலியாக இட்டுள்ளதை அனுமதித்துள்ள காரணத்தினாலும், போலியாக ஆவணம் தயாரித்து பணம் கையாடல் செய்தது மட்டுமில்லாமல், ஊராட்சி மன்றத் தலைவர் என்னும் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அரசு திட்டத்தில் முறைகேடு செய்தது, அரசின் நிதியை கையாடல் செய்து இதன் மூலம் ஏழை எளிய கிராமப் புற வேலையற்ற மக்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான வேலைவாய்ப்பை பறித்து, அரசின் சீரிய திட்டமான தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தை சீர்குலைத்த கிளாவடிநத்தம் கிராம ஊராட்சியின் தலைவர் திரு. எம். குமார் என்பவரை கிளாவடிநத்தம் கிராம ஊராட்சியின் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

இந்த அறிவிக்கையின் மீது மறுபரிசீலனை செய்வதற்கு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் 1994, பிரிவு 205 உட்பிரிவு 12–ன்படி, தமிழக அரசிற்கு அதிகாரம் உள்ளது.

கடலூர்,
2010 ஜூன் 30.

**பெ. சீத்தாராமன்,**
*ஊராட்சிகளின் ஆய்வாளர் மற்றும்*
*மாவட்ட ஆட்சித்தலைவர்*

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU

DTP—VI-2 Ex. (205)